# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 20 ம் தேதி, திங்கள்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 04 ஆம் நாள்

CC No.07/2020
(CNR No: TNAL070000532020)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>தா.பழூர் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 124/2019. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | இராஜேந்திரன் (59/2026), த/பெ.ராமலிங்கம்,<br>வடக்குத்தெரு, அணைக்குடம், அரியலூர்<br>மாவட்டம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 24.06.2019 | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 27.06.2019 | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | 27.06.2019 | 01.07.2019 |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 11.12.2019 | |
| 7 | கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றச் சாட்டு வனைந்து வினவப் பட்ட நாள் | : | 04.11.2022 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப் பட்ட நாள் | | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 24.01.2025 | 24.01.2025 |
| | | | அ.சா.2 | 24.01.2025 | 24.01.2025 |
| | | | அ.சா.3 | 24.01.2025 | 24.01.2025 |
| | | | அ.சா.4 | 24.06.2025 | 24.06.2025 |
| | | | அ.சா.5 | 24.06.2025 | 24.06.2025 |
| | | | அ.சா.6 | 24.07.2025 | 24.07.2025 |
| | | | அ.சா.7 | 09.10.2025 | 09.10.2025 |
| | | | அ.சா.8 | 07.07.2026 | 07.07.2026 |
| 9 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 09.07.2026 | | |

இவ்வழக்கு கடந்த 23.01.2020 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 20.07.2026ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி.C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகிவும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பிரபு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

1. இவ்வழக்கின் புகார்தாரரின் ஆரஸ்பதி தோப்பு மின்கசிவால் தீ பற்றி எரிந்துவிட்டது சம்மந்தமாக புகார்தாரர் யாரையும் குறைகூறி பேசாமல் இருந்தும் 24.06.2019ம் தேதி காலை 07.30 மணியளவில் தனது வீட்டிற்கு அருகில் உள்ள மாட்டு கொட்டாயில் மாடுகளை அவிழ்த்துவிட்டு வந்தபோது எதிரி புகார்தாரரை பார்த்து நீ என்னடி உன் ஆரஸ்பதி தோப்பு எறிந்ததற்கு என்னை திட்டுற குச்சிகாரி, தேவிடியா என அசிங்கமாக திட்டி கட்டை கழியால் புகார்தாரரை தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரரை பார்த்து உன்னை எப்போதிருந்தாலும்

கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்துள்ள எதிரியின் செய்கையானது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் அதனை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படியும், வழக்கினை கோப்பிற்கு எடுத்துக் கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலணை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 320ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கில் உள்ள குற்ற பிரிவுகள் சமாதானம் ஆகாத குற்றம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:–**

7. அ.சா.1 கவிதா தனது சாட்சியத்தில் கடந்த 24.06.2019ம் வருடம் காலை 07.30 மணியளவில், தான் தன் வீட்டு மாட்டுக்கொட்டகையில் மாடுகளை அவிழ்த்து கட்டிக்கொண்டிருந்தேன் என்றும், அப்போது ராஜேந்திரன் ஆரஸ்பதி எறிந்ததற்கு,

தன்னை ஏன் பேசுகிறாய் என திட்டி, தேவிடியா மகளே, குச்சிகாரி மகளே என்று திட்டினார் என்றும், கையிலிருந்த கட்டை கழியால் தன் நெற்றி, தலையில் அடித்துவிட்டார் என்றும், அப்போது தன் கணவர் வந்து தடுத்தபோது, அவருக்கும் காலில் அடிபட்டது என்றும், அவரை கட்டையால் அடித்தார் என்றும், தனக்கு இரத்தம் வந்ததும் தனக்கு மயக்கம் வந்தது என்றும், தான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்ததுதான் என்றும், அதில் உள்ள கையெழுத்து அ.த.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.2 திருஞானம் தனது சாட்சியத்தில் கடந்த 24.06.2019ம் தேதிக்கு முதல்நாள் ஆரஸ்பதி மரம் எறிந்தது பற்றி தானும், தன் மனைவியும் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், மறுநாள் 07.30 மணியளவில், தான் வீட்டிலிருந்தபோது, மாட்டுக் கொட்டகையில் தனது மனைவி மாடு அவிழ்த்துக்கொண்டிருந்தார் என்றும், அப்போது எதிரி ஆரஸ்பதி எறிந்தது எப்படி தங்களை நீ பேசலாம் என்று சொல்லி, நார புண்ட குச்சிகாரி உன்னை கொல்லாமல் விடமாட்டேன்டி என்று திட்டி, ஒரு அடி கட்டையால் அடித்தார் என்றும், தனது மனைவிக்கு தலையில் அடிபட்டது என்றும், தான் தன மனைவியை அடிக்காதீர்கள் என்று தடுத்தபோது, தன்னையும் கட்டையால் இரண்டு கால்களிலும் எதிரி அடித்தார் என்றும், தன் மனைவிக்கு தலையிலிருந்து இரத்தம் வந்ததால், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்று சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.3 ராதாகிருஷ்ணன் தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.4 மற்றும் அ.சா.5 தங்களது சாட்சியத்தில், வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், தங்களிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் தங்களுடையது இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்கள்.

11. அ.சா.6 தனது சாட்சியத்தில் அ.சா.1க்கும் ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.7 திரு.கலைசெல்வம் தனது சாட்சியத்தில், கடந்த 24.06.2019ம் தேதி ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, காலை 09.25

மணிக்கு சிகிச்சைக்கு வந்த அணைக்குடம் வடக்கு தெருவைச் சேர்ந்த திருஞானம் மனைவி கவிதா, வயது 38 என்பவரை விசாரிக்க, தன்னை 24.06.2019 ம் தேதி காலை 08.00 மணிக்கு தெரிந்த 5 நபர்கள் உருட்டுக்கட்டை கழியால் அவரை அவரது வீட்டில் வைத்து அடித்துவிட்டதாக கூறி, உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன் என்றும், கவிதா என்பவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது என்றும், 1) 3x 4 செ.மீ. அளவிலான சிதைந்த காயம் (Laceration injury)அவரின் வலது புறம் முன் தலையில் (Right side of forehead) காணப்பட்டது என்றும், பின்னர் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் திரு.வி.பாண்டியன் என்பவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று காயச்சான்று வழங்கினார் என்றும், அதனடிப்படையிலும், தான் பரிசோதித்ததன் அடிப்படையிலும் கவிதாவிற்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று அ.த.சா.ஆ.2 வழங்கினேன்

13. அ.சா.8 ராஜதுரை தனது சாட்சியத்தில் தான் கடந்த 24.06.2019 நான் தா.பழூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலனைப்பெற்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த கவிதா என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் பெற்று, மனு எண் 253/2019 என பதிவு செய்து, விசாரணைக்கு பின்னர் 27.06.2019 ம் தேதியன்று நிலைய குற்ற எண் 124/2019, ச/பி.294(பி), 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 பதிவு செய்தேன் என்றும், அன்றைய தினமே சம்பவ இடம்சென்று சாட்சிகள் கண்ணன், ராமதாஸ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் அ.த.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 தயார் செய்தேன் என்றும், சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரணை செய்தபோது, சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடியபோது, 27.06.2019 ம் தேதியன்று 13.00 மணிக்கு அணைக்குடம் பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து எதிரியை கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் திரு.கலைச்செல்வன் மற்றும் திரு.பாண்டியன் ஆகியோரை

விசாரணை செய்து, வாக்குமூலம் பதிந்து, அவர்கள் கொடுத்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றேன் என்றும், இத்துடன் விசாரணையை முடித்து எதிரியின் மீது 11.12.2019 ம் தேதி ச/பி.294(பி), 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

14. எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

15. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

16. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

## தீர்வு

17. இவ்வழக்கின் அ.சா.1ன் ஆரஸ்பதி தோப்பு மின்கசிவால் தீ பற்றி எரிந்துவிட்டது சம்மந்தமாக கடந்த 24.06.2019 ம் தேதி காலை 07.30 மணியளவில் தனது வீட்டிற்கு அருகில் உள்ள மாட்டு கொட்டகையில் மாடுகளை அவிழ்த்துவிட்டு வந்தபோது எதிரி அ.சா.1ஐ பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், கட்டை கழியால் அ.சா.1ன் தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்ததாக எதிரி மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

18. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.8 சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. அ.சா.1 கவிதா இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் காயம்பட்ட சாட்சியாக முன்னிடப்பட்டுள்ளார். அ.சா.2, அ.சா.1ன் கணவர் ஆவார். கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிடப்பட்டுள்ள அ.சா.3 இராதாகிருஷ்ணன், அ.சா.6 மனோகரன் தங்களுக்கு என்ன பிரச்சனை என்று தெரியாது என்று சாட்சியமளித்துள்ளதாலும், பார்வை மகசர் சாட்சிகளாக முன்னிடப்பட்டுள்ள அ.சா.4 கண்ணன், அ.சா.5 இராமதாஸ் ஆகியோர் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் தங்களுடையது எதுவும் இல்லையென சாட்சியமளித்துள்ளதாலும் அ.சா.3 முதல் அ.சா.6 வரையிலானவர்கள் அரசுதரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.7 ஆக முன்னிடப்பட்டுள்ளார்.

20. எதிரி தரப்பில் எதிரி குடும்பத்திற்கும் அ.சா.1ன் குடும்பத்திற்கும் இடையே சொத்து சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது என்றும், எதிரியை பழி வாங்கும் நோக்கத்தில் எதிரி மீது இந்த பொய்யான வழக்கு போடப்பட்டுள்ளது என்ற வாதம் வைக்கப்பட்டுள்ளது. அதுகுறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரி குடும்பத்திற்கும் தன் குடும்பத்திற்கும் சொத்து பாகம் பிரித்து கொண்டது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான் என்று சாட்சிமளித்துள்ளார். எனவே, அ.சா.1ன் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் இடையே முன்விரோதம் உள்ளது என்பது தெரிய வருகிறது. இந்நிலையில் அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தை அனுசரித்து தனிநபர்கள் யாரும் சாட்சியமளிக்கவில்லை. எனவே, தனிநபர்களின் சாட்சியத்தின் மூலம் வலுப்படுத்தப்படாத அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தை மிகவும் நுட்பமாகவும் கூர்ந்தும், கவனமாகவும் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

21. அ.சா.1 தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று தான் வீட்டு மாட்டு கொட்டகையில் மாடுகளை அவிழ்த்துக்கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரி தன்னை தகாத வார்த்தைகளால் திட்டி, கட்டை கழியால் நெற்றி மற்றும் தலையில் அடித்துவிட்டார் என்றும், அப்போது தனது கணவர் வந்து தடுத்தபோது அவரை கட்டையால் அடித்தார் என்றும், அவருக்கு காலில் அடிபட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

22. அ.சா.2 தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று எதிரி தனது மனைவியை ஒரு அடி கட்டையால் அடித்தார் என்றும், தனது மனைவிக்கு தலையில் அடிபட்டதாகவும் தான் தனது மனைவியை அடிக்காதீர்கள் என்று தடுத்தபோது தன்னையும் கட்டையால் இரண்டு கால்களிலும் எதிரி அடித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என்றும், சத்தம் கேட்டுதான் போனேன் என்றும் சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.2 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அ.சா.2 இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தாரா என்ற சந்தேகம் எழுகிறது. மேலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில் எதிரி அ.சா.2 ஐ கட்டையால் தாக்கியதாக சாட்சியமளித்துள்ளார்கள். மேலும், அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக கூறியுள்ளார். ஆனால், அ.சா.1 ற்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.1 மட்டுமே சிகிச்சைக்கு வந்ததாகவும் அவரை அ.சா.2 அழைத்து வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 சிகிச்சைக்கு வந்ததாகவும் அவருக்கு தான் சிகிச்சை அளித்ததாகவும் எந்தவொரு சாட்சியத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், அ.சா.2 சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

23. அ.சா.1 தன்னை எதிரி தனது மாட்டு கொட்டகையில் வைத்து தாக்கியதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவரான அ.சா.7 தனது சாட்சியத்தில், அ.சா.1 ஐ தெரிந்த 5 நபர்கள் உருட்டு கட்டை கழியால் அவரது வீட்டில் வைத்து தாக்கியதாக அ.சா.1 கூறினார் என்று சாட்சியமளித்துள்ளார். எத்தனை நபர்கள் அ.சா.1 ஐ தாக்கினார்கள் என்பது குறித்தும், எந்த இடத்தில் வைத்து தாக்கினார்கள் என்பது குறித்தும் அ.சா.1 ன் சாட்சியம் அ.சா.7 ன் சாட்சியமும் ஒன்றுக்கொன்று முரண்படும் வகையில் உள்ளது. எனவே, அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் எதிரி தாக்கியதால் தான் ஏற்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது.

24. அ.சா.1 ன் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் அ.சா.2 மற்றும் அ.சா.7 ன் சாட்சியங்கள் அமையவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே, அ.சா.1, அ.சா.2, அ.சா.7 ன் சாட்சியம் ஒன்றுக்கொன்று கோர்வையாகவும், நம்பும்படியாகவும் அமையவில்லையென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25. எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

26. முடிவாக எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரவு 248(1)ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

27. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

28. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 20ம் நாள் திங்கள்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-P.Kanimozhi)
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

<u>அட்டவணை : –</u>
<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

அ.சா.1 – கவிதா

அ.சா.2 – திருஞானம்

அ.சா.3 – ராதாகிருஷ்ணன்

அ.சா.4 – கண்ணன்

அ.சா.5 – இராமதாஸ்

அ.சா.6 – மனோகரன்

அ.சா.7 – கலைசெல்வன்

அ.சா.8 – இராஜதுரை, காவல் உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.த.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.2 – விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ்

அ.த.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.4 – பார்வை மகசர்

அ.த.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள்</u>** : இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u>** : இல்லை

(Sd/-P.Kanimozhi)

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.